தினமணி

## இடைத்தரகர்களால் விவசாயிகள் பாதிப்பு! தோட்டக்கலைத் துறை இயக்குநர் சந்திரமோகன்

First Published : 28 Jun 2011 08:29:53 AM IST

கோவை, ஜூன் 27: இடைத்தரகர்களால் விவசாயிகள் பாதிக்கப்படுவதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தோட்டக்கலைத்துறையின் இயக்குநர் பி.சந்திரமோகன் வலியுறுத்தினார்.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சார்பில் 77-வது வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்களின் மாநாடு திங்கள்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு தோட்டக்கலைத் துறையின் இயக்குநர் பி.சந்திரமோகன் பேசியது:

விவசாய உற்பத்தியை இரு மடங்காக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

வேளாண் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்குச் சென்றடைவதன் மூலமே இது சாத்தியமாகும். அதுபோல விவசாயத்தைச் சார்ந்துள்ளவர்களின் பொருளாதாரம் உயர வேண்டும். அவர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்க வேண்டும்.

தோட்டக்கலை துறையில், துல்லிய பண்ணை முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் உற்பத்தி பெருகியிருக்கிறது. ஆனால், துல்லிய பண்ணை முறை தொழில்நுட்பம் விவசாயிகளிடம் சென்றடைவதில் பிரச்னை உள்ளது.

எனவே வேளாண் தொழில்நுட்பங்கள், விவசாயிகளை சென்றடைவதற்கு முறையான பயிற்சிகளை, வேளாண்மைப் பல்கலைக்கழகம் செய்ய வேண்டும்.

வாழை உற்பத்தியில் சில குழப்பங்கள் உள்ளன. புதிய முறையில் பயிரிடுவது சாத்தியமானாலும், நிலத்தில் பயிரிட்டு அறுவடை செய்வதில் பிரச்னை உள்ளது. இதற்கு போதிய அளவில் விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் அளிக்க வேண்டும்.

மாம்பழம் உற்பத்தி செய்வோருக்கு போதிய விலை கிடைப்பதில்லை. மாம்பழ விலை குறையும்போது, அதை பயிரிடும் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். இதனால், மாம்பழம் பயிரிடுவதை நிறுத்தி விடுகின்றனர்.

விவசாயிகளுக்குப் போதிய விலை கிடைக்காத பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும். இதற்கென சந்தைப்படுத்துதல் மற்றும் விற்பனை முறையை மேலும் வலுப்படுத்த வேண்டும். எந்தவொரு விவசாயியும் பாதிக்கப்படக்கூடாது.

விவசாயிகளுக்கு அவர்கள் அறுவடை செய்த பொருளுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. இதில் இடைத்தரகர்கள் தலையிட்டு, குறைந்த விலைக்கு வேளாண் பொருள்களை வாங்குகின்றனர். பின்னர் அதிக விலைக்கு வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்கின்றனர். விளைச்சல் செய்வது ஒருவர், பயன்பெறுவது இடைத்தரகர் என்ற நிலைமை இன்றும் தொடர்கிறது. இடைத்தரகர்களால் விவசாயிகள் பாதிக்கும் நிலையை அரசு களை எடுக்க வேண்டும். இந்த நிலைமையைத் தடுக்க அரசு புதிய முறைகளை கொண்டுவந்து விவசாயிகளை காப்பாற்ற வேண்டும் என்றார் பி.சந்திரமோகன்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் எம்.பரமாத்மா, வேளாண் பொறியியல் துறையின் முதன்மை பொறியாளர் ஆர்.சுப்பிரமணியன், சேலம் சேகோசெர்வ் மேலாண் இயக்குநர் கே.கே.கௌசல் மற்றும் இந்திய வேளாண்

ஆராய்ச்சி கவுன்சில் (ஐ.சி.ஏ.ஆர்.) விஞ்ஞானிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முருங்கையில் நவீன சாகுபடி தொழில்நுட்பங் கள், நிலக்கடலை சாகுபடி உயர் தொழில்நுட்பங்கள், நவீன முறை பருத்தி உற்பத்தி உள்ளிட்ட நான்கு புத்தகங்கள் வெளியிடப்பட்டன.

**விவசாயிகளின் வருமானத்தை பெருக்குவதே அரசின் இலக்கு: வேளாண் உற்பத்தி ஆணையர் கே. அருள்மொழி**

First Published : 28 Jun 2011 08:29:04 AM IST

கோவை, ஜூன் 27: விவசாய உற்பத்தியுடன், விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்கு ஆக்குவதே அரசின் இலக்காகும் என்று வேளாண் உற்பத்தி ஆணையாளரும், முதன்மைச் செயலாளருமான கே.அருள்மொழி (படம்) தெரிவித்தார்.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 77-வது வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்களுக்கான மாநாடு திங்கள்கிழமை நடைபெற்றது.

இதில் வேளாண் உற்பத்தி ஆணையாளரும், முதன்மை செயலாளருமான கே.அருள்மொழி பேசியது: நிலம் மற்றும் நீரை அடிப்படையாகக் கொண்டே விவசாயம் உள்ளது. நகர்மயமாதல் மற்றும் நீர் பற்றாக்குறை போன்ற பல்வேறு காரணங்களால் விவசாயத் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. இப்போது பருவநிலை மாற்றம் பிரச்னை புதிதாக உருவெடுத்துள்ளது. விவசாய பொருள் உற்பத்தியை இரு மடங்கு பெருக்குதல், விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்காக பெருக்குதல், சந்தையை வலுப்படுத்துதல், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை சரிசெய்தல், புதிய தொழில்நுட்பங்களை புகுத்துதல் போன்றவை அரசின் இலக்காக உள்ளது. அரிசி, கரும்பு மற்றும் பருப்பு உற்பத்தியை மேலும் பெருக்க வேண்டியது அவசியமாகிறது. துல்லிய பண்ணை முறை, பூச்சி தாக்குதலில் இருந்து பாதுகாப்பு நடவடிக்கை என பல்வேறு கட்டங்களைத் தாண்டி வேளாண்துறையை வலுப்படுத்த வேண்டியுள்ளது என்றார்.

வேளாண் துறை ஆணையாளர் சந்தீப் சக்ஷேனா: நிலத்தின் மதிப்பு உயர்ந்துவிட்டதால் வேளாண் தொழில் கொஞ்சம் சரிந்து வருகிறது. ஆனால் உணவுப் பொருள் தேவையோ மிகவும் அதிகமாக உள்ளது. இதற்கு வேளாண் தொழிலில் ஒருங்கிணைந்த வளர்ச்சியும், நீடித்த தன்மையும் வேண்டும்.

சர்க்கரை துறை ஆணையாளர் ராஜீவ் ரஞ்சன்: இந்தியாவின் பொருளாதாரம் 8 முதல் 10 சதவீதம் வரை உயர்த்த மத்திய அரசு முன்முயற்சி எடுத்து வருகிறது. இதற்கு உணவுப் பாதுகாப்பு மிகவும் அவசியமாகும். மிக வேகமாக நகரமயமாகி வரும் மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. இங்கு நிலத்தின் மதிப்பு உயர்ந்துவிட்டதால், வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் ப.முருகேச பூபதி:

விவசாய பொருள் உற்பத்தியைப் பெருக்க வேளாண் பல்கலைக்கழகம் பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு தொழில்நுட்பங்களை கண்டுபிடித்து விவசாயிகளுக்கு உதவி செய்யும்.

**வளம் இழந்த வனப்பரப்புகள்**

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 28 Jun 2011 01:17:01 AM IST

வளர்ச்சி என்ற பெயரில் அடர்ந்த வனங்கள் காணாமல் போய்க்கொண்டிருக்கும் வேளையில், அண்மையில் வெளிவந்த "ஃபாரஸ்ட் சர்வே' அறிக்கை இந்தியாவில் பசுமைப்போர்வை உயர்ந்து வருவதாகக் கூறுவது மிகவும் வேதனையான நகைச்சுவை.

இந்தியாவிலும் சரி, உலகில் எந்த நாடாக இருந்தாலும் சரி, பூமியின் நிலப்பரப்பில் குறைந்தபட்சம் 22 சதவீதமாவது அடர்ந்து படர்ந்து மரங்களுடன் பல்லுயிர்ப் பெருக்கங்கள் மிகுந்த வனங்கள் இருக்க வேண்டும் என்ற கருத்தை யாரும் மறுப்பதற்கில்லை.

ஆகவே, வளர்ச்சி என்ற போர்வையில் சுரங்கம், அணைக்கட்டு என்று வனங்களை இனி தாரைவார்க்க அனுமதிக்கவே முடியாது என்ற தர்மத்தை மறந்து, ஒரிசாவில் போஸ்கோ என்ற மாபெரும் தென்கொரிய நிறுவனத்துக்கு சுமார் 40,000 ஏக்கர் வனப்பகுதி வழங்கப்பட்டுள்ளதில் தனியார் நிலங்களும் அடங்கும்.

ஓரளவு வனப்பகுதியில் பழங்குடி விவசாயிகள் வெற்றிலை சாகுபடி செய்கின்றனர். போஸ்கோ ஸ்டீல் ப்ராஜக்ட் 12 பில்லியன் டாலர் அந்நிய முதலீடு கொண்டது. இந்த ஆண்டு மே மாதம் வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம் வனப்பகுதியை மேற்படி ஸ்டீல் சுரங்கத் தொழிலுக்குத் தாரை வார்க்க அனுமதித்துவிட்டது.

தனியார் நிலத்தை வாங்கப் பணத்துடனும், காவல்துறை உதவியுடனும் நிறுவன அலுவலர்கள் ஜகத்சிங்பூர் மாவட்டத்தில் பலிதுத்தம் கிராமத்துக்கு வந்தபோது, சுமார் ஆயிரக்கணக்கான விவசாயிகள் ஒன்றுகூடி நிலம் வழங்க மறுத்துள்ளனர்.

சுமார் 600 காவலர்கள் துப்பாக்கியுடன் விவசாயிகளை வேட்டையாடத் தயாராயிருந்தபோது, முதலமைச்சர் நவீன்பட் நாயக், ""விவசாயிகள் சம்மதமில்லாமல் நிலத்தை வழங்க முடியாது" என்று கூறினார். அப்படியும் நுவாகான் கிராமத்தில் வெற்றிலை பயிரிட்டவனுக்கு இழப்புத்தொகை வழங்காமல் யாருக்கோ பல லட்சம் பணம் கொடுத்துக் கொடிக்காலைத் துவம்சம் செய்ததால், விவசாயிகள் கொதித்தெழுந்துள்ளனர்.

இவைதவிர, சுந்தர்கார் மாவட்டத்தில் கந்தாதார் மலைப்பகுதிகளில் சுமார் 6,000 ஹெக்டேர் வனம் தாரை வார்க்கப்பட்டதை எதிர்த்து வனங்களில் மக்கள் உரிமைச்சட்டம் 2006-ஐ பயன்படுத்தி, போஸ்கோவின் சுரங்கச் சுரண்டலை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்நிலையில், பழங்குடி மக்கள் புரோகிதர் ரேணு சௌத்ரி, ""இங்குள்ள பழங்குடி மக்களின் போராட்டம் வலுப்பட்டுள்ள நிலையில் இப்பகுதி வனம் போஸ்கோவிடமிருந்து காப்பாற்றப்பட்டுவிடும்..." என்று கூறியுள்ளார். இப்படிப்பட்ட பிரச்னைகள் ஒரிசாவில் நிறைய உண்டு.

மத்தியப் பிரதேசத்தில் கத்திவாடா வனம் பழங்குடி மக்களின் அனுபவத்தில் உள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க பீலர், பாரியர், கோலியர் வசிக்கும் இடங்களை அப்புறப்படுத்தி அதை மனித நுழைவுக்கு அனுமதியில்லாத சரணாலயமாக்கும் திட்டத்தை எதிர்த்து மேற்படி பழங்குடி மக்கள் தங்கள் வசிப்பிடத்தைக் காலிசெய்ய மறுத்துவிட்டனர்.

இம்மக்கள் இந்த வனங்களில் உள்ள இலுப்பைப் பூ, பீடி இலை, அரக்கு, கோந்து, தேன் ஆகியவற்றைச் சேகரம் செய்து பிழைப்பு நடத்துகின்றனர். சால்விதை, இலுப்பை விதைகளும் தாவர எண்ணெய் உற்பத்திக்கு உதவும். அவையும் சேகரிக்கப்படுகின்றன.

மேதா பட்கர் போராடிக் கொண்டிருக்கும் நர்மதை மீது கட்டப்படவுள்ள சர்தார் சரோவர் அணைத் திட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வு மூன்று மாநிலங்களில் பிரச்னையாகிவிட்டது. இதனால் குஜராத், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம் சார்ந்த 1,10,000 ஹெக்டேர் வனம் இழக்கப்படுகிறது.

வன ஆக்கிரமிப்பு - வன அழிவுக்குரிய உதாரணங்கள் ஒரு சில மட்டுமே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. வனம் மற்றும் சூழலியல் அமைச்சகத்தின் ஒப்புதலுக்காகக் காத்துக்கிடக்கும் காகிதத் திட்டங்களுக்கெல்லாம் அனுமதி வழங்கப்படுமானால், இந்தியாவில் சொல்லிக்கொள்வதற்கு வனம் என்று எதுவுமே எஞ்சாது. நாமெல்லாம் கார்பன்-டை-ஆக்சைடை சுவாசித்துச் சாவதைத்தவிர, வேறு வழியில்லை!

வனம் என்றால் வருமானம் இல்லாத ஒரு பொருள் என்பதாகவும், வனம் உள்ள இடத்தில் தொழிற்சாலையோ, அணையோ கட்டினால்தான் வருமானம், வேலைவாய்ப்பு எல்லாம் ஏற்படும்

என்பதாகவும் ஒரு தப்பான எண்ணம் மனிதனின் சுயநலத்தால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஒரு வனம் வனமாகவே நீட்டிக்கப்பட்டு வனமே வருமானத்தை உயர்த்தாது என்ற சிந்தனை வளர்ச்சிப் பொருளாதாரத்தை நேசிக்கும் வறட்டுப் பொருளியல் நிபுணர்கள் மத்தியில் நிலவுகிறது.

ஒவ்வொரு நாளும் இந்திய வனம் ஒவ்வொரு ஓரமாக அழிக்கப்படுகிறதே தவிர, ஆக்கப்படுவதாகத் தோன்றவில்லை. வனங்களின் வளத்தைப் பெருக்கி மக்களுக்கு வாழ்வு தரும் மரங்களை நட வேண்டும் என்று பலரும் பேசுவதுண்டு. பேசியதைப்போல் வனங்களில் வெட்டப்பட்ட மரங்களை மீண்டும் நடும் திட்டம் அரிதாகவே செயல்படுகிறது.

வனத்தில் மரங்களை அழிப்பவர்கள் வனங்களில் வாழும் பழங்குடிகள் அல்லர். மரம் வெட்டும் ஒப்பந்தக்காரர்கள் தடுக்கப்பட்டாலும் ஊழலில் திளைக்கும் வளர்ச்சிப் பேயர்களான போஸ்கோவும் கோஸ்கோவும் அழிக்கின்றனர். இவர்கள் வழங்கும் எஃகு யாருக்குத் தேவை?

உத்தரகண்ட் மாநிலத்தில் புனித கங்கையை மாசுபடுத்தும் நீர்மின்சாரத் திட்டங்களின் சட்டவிரோத கல்குவாரிகளை அப்புறப்படுத்தி, 114 நாள்கள் உண்ணாவிரதம் இருந்த நிகமானந்தா சுவாமிகள் கங்கையைக் காப்பாற்ற உயிர்த்தியாகம் செய்தும் பயன் உண்டா?

கழுகுகள் வட்டமிடும் வானத்தில் ஓர் அன்னப்பட்சியாக வாழ்ந்த நிகமானந்தா இறந்துவிட்டார். நிகமானந்தா மறைந்த பிறகுதான் அப்படியொருவர் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்குச் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த விவரமே தெரியவந்தது. அண்ணா ஹசாரேவுக்கும், பாபா ராம்தேவுக்கும் வழங்கப்பட்ட விளம்பரம் நிகமானந்தாவுக்குக் கிடைக்கவே இல்லை. நிகமானந்தா மறையும் முன் ஊடகங்கள் அவரைக் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை.

அண்ணா ஹசாரே மற்றொரு அமைதிப்புறா. எனினும், பிணம் தின்னும் கழுகுகளுடன் போராட குறைந்தபட்சம் பாபா ராம்தேவ் போன்ற சண்டைக்கோழிதான் லாயக்கு என்று தோன்றுகிறது. கறுப்புப்பண எதிர்ப்பு அலைகளுக்குத் தயாரான சண்டைக்கோழிகள் வாழ்வு தரும் மரங்களைக் காப்பாற்றவும் முன்வர வேண்டும். வனவளர்ப்பு என்றால் பசுமைப் போர்வைக்குமேல் வனப்பாதுகாப்பு அலுவலர்கள் வேறு சமூகப் பொருளாதாரம் பற்றி விவாதிக்க முன்வருவதில்லை. வனச்சுரண்டலுக்கு வழிகொடாமல் வனப்பாதுகாப்புக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்று கூறும் வனஇயல் வல்லுநர்கள், ஆண்டுதோறும் பட்ஜெட் தொடருக்குமுன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பொருளாதார அறிக்கையில் (எக்கனாமிக் சர்வே) வனங்களின் மதிப்பீடு, வனங்களின் பொருளியல் முக்கியத்துவம் இடம்பெறுவது இல்லை. இந்தியாவின் தேசக்கணக்கில் வனம் விட்டுப்போனது ஏன்?

பொதுவாக வன விளைபொருள்கள் மூலம் பொருளாதாரம் பலம் பெறுவது பற்றிய மதிப்பீடுகள் உண்டு. அப்படி வருமானத்துக்கு ஆதாரமான வனங்கள் பற்றிய மதிப்பீடுகள் உண்டா? வெட்டப்படும் மரங்கள், மூங்கில் பற்றிய மதிப்பீடுகள் உண்டு. ஏனெனில், காவலர்களுக்கும் வருமானத்தில் பங்கு உள்ளது. ஆனால், ஒரு வனம் வழங்கும் ஆக்சிஜன் மூலம் பெறக்கூடிய கார்பன் கிரெடிட் பற்றிய கணக்கு உண்டா?

ஒரு வனம் வழங்கும் மூலிகை, எண்ணெய் வித்துகள், ஏற்றுமதிக்குரிய மரப்பட்டை, வேர் போன்ற மருத்துவப் பொருள்கள், ஆடு மாடு தீவனம், பசும்புற்கள், களைப்புற்கள், வனம் வழங்கும் தீவனத்தால் பெறும் பால் அளவு, வனங்களால் ஏற்றமாகும் நீர்ப்பிடிப்பு, பாசன நீர், வனம் வழங்கும் மண்வளம், வனம் வழங்கும் ஜீவனோபாயம், அதாவது வனத்தில் விளையும் மலர்கள், விதைகள், மூலிகை போன்ற பொருள்களைச் சேகரித்துப் பிழைப்பை நடத்தும் பழங்குடி மக்களின் வசிப்பிடம், அவர்கள் பெறும் வேலைவாய்ப்பு ஆகியவை மதிப்பிடப்பட்டு தேசியக்கணக்கில் சேர்க்கப்பட்டுப் பொருளாதார அறிக்கை சமர்ப்பிக்கப்படுமானால், வனங்களும் வளர்ச்சிப் பொருளாதாரத்தின் அம்சம் என்பது புலனாகும்.

யாரோ சில தனிப்பட்ட முதலாளிகளும், நல்ல சம்பளம் பெறக்கூடிய மேல்தட்டு நடுத்தர வர்க்கமும் ஆடம்பரமாக வாழவே வனங்கள் அழிக்கப்பட்டு, தொழிற்சாலைகளும் ஆலைகளும் உருவாக்கப்பட்டு மாசுகள் ஏற்படுகின்றன. ஒரு பசுமாட்டைக் கொல்வது எவ்வளவு பாவமோ அவ்வாறே வனங்களை அழித்து ஆலைகளும் சாலைகளும் ஏற்படுத்துவதும் கொடிய பாவச்செயல்.

வனம் வழங்கும் வளத்தில் அரிய தாவரங்கள், பல்வேறு ஜீவராசிகளின் பல்லுயிர்ப் பெருக்கப் பொருள் மதிப்பீடு அங்கு அந்த வனத்தை அழித்து ஏற்படக்கூடிய தொழில் வருமான மதிப்பீட்டைவிட அதிகம் என்பதால், வனங்களைச் சேதப்படுத்தாமல் தொழிலை வளர்க்கத் திட்டமிட வேண்டும்.

வனங்களில் உள்ள பல மரங்கள் தெய்வீகமானவை. புனிதம் கருதி வெட்டும் மரபு இல்லை. சூழலுக்காக உயிர் துறந்த நிகமானந்தா வரலாற்றில் இடம் பிடித்துவிட்டார். நிகமானந்தாவைத் தொடர்ந்து ஜீவன்முக்தர்கள் உயிர்த்தியாகம் செய்ய வேண்டாம். குறைந்தபட்சம் வனங்கள் தொடர்ந்து அழிக்கப்படாமல் காப்பாற்றவும், போஸ்கோவையும் கோஸ்கோவையும் எதிர்த்து ஏழைகளின் நலவாழ்வுக்காக ஆசிரமவாசிகள் அமைதியாகப் போராடினால் சமூகத்தில் சாமியார்களுக்குள்ள அவப்பெயர்கள் மாறவும் வாய்ப்புண்டு. கறுப்புப் பண எதிர்ப்புப் போராட்டம் தேவைதான் என்றாலும், வனப் பரப்புகளைக் குறையாமல் பார்த்துக் கொண்டு வன வளத்தை மேம்படுத்துவது அதைவிடவும் முக்கியமானது.

**சின்ன வெங்காயம் விலை உயர்வு**

First Published : 28 Jun 2011 08:19:58 AM IST

Last Updated : 28 Jun 2011 09:00:49 AM IST

பல்லடம், ஜூன் 27: பல்லடத்தில் சின்ன வெங்காயம் விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பல்லடம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் சுமார் 5ஆயிரம் ஏக்கரில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளையும் சின்ன வெங்காயம் பல்லடம், திருப்பூர், கோவை மற்றும் கேரளத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

சின்ன வெங்காயத்தின் கொள்முதல் விலை கடந்த மாதம் ரூ.20-ஆக இருந்தது. தற்போது, அது ரூ.28-ஆக உயர்ந்துள்ளது. இதனால், சின்ன வெங்காய விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். சின்ன வெங்காயத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் விலை உயர்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

**உரக் கடைகளில் விலை பட்டியலை வைக்க உத்தரவு**

First Published : 28 Jun 2011 08:01:52 AM IST

தேனி, ஜூன் 27:÷தேனி மாவட்டத்தில் உள்ள தனியார் உரக் கடைகளில் உரங்களின் விலைப் பட்டியலை விவசாயிகளின் பார்வையில் படும் இடத்தில் வைக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

÷இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:÷மாவட்டத்தில் முதல்போக நெல் சாகுபடி மற்றும் இதரப் பயிர் சாகுபடிக்குத் தேவையான உரங்கள் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மைக் கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உரக் கடைகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு உரம் மற்றும் விதைகள் அரசு நிர்ணயித்த விலையில் தட்டுப்பாடின்றியும், தரமாகவும் கிடைப்பதை கண்காணிக்க வேளாண் துறை, கூட்டுறவுத் துறை அதிகாரிகள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

÷தற்போது ஸ்பிக் யூரியா ரூ.278.51, விஜய் யூரியா ரூ.278.88, மங்கலா யூரியா ரூ.278.51, ஸ்பிக் டிஏபி ரூ.651.06, ஐபிஎல் டிஏபி ரூ.608.40, ஐபிஎல் பொட்டாஷ் ரூ.312, கோரமண்டல் சூப்பர் பாஸ்பேட் ரூ.215, கோத்தாரி சூப்பர் பாஸ்பேட் ரூ.225, பாக்டம்பாஸ் 20:20:00:13 ரூ.488.64, கோரமண்டல் 20:20:00:13 ரூ.493, ஸ்பிக் 20:20:00:13 ரூ.524.72 விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

÷உரக் கடைகளில் உரங்களின் விலைப் பட்டியலை விவசாயிகளின் பார்வையில் படும் இடத்தில் வைக்க வேண்டும் என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கொடைக்கானலில் மழை இல்லாததால் விவசாயிகள் கவலை**

First Published : 28 Jun 2011 08:09:34 AM IST

கொடைக்கானல், ஜூன் 27: கொடைக்கானலில் எதிர்பார்த்த மழையில்லாததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கொடைக்கானலில் பொதுவாக ஜூன் மாதத்தில் பருவ மழை பெய்யத் தொடங்கும். இந்த ஆண்டு ஜூன் முதல் வாரத்தில் மட்டும் ஒரு சில நாள்களில் மழை பெய்தது. அதனைத் தொடர்ந்து மழை பெய்யவில்லை.

÷இந்நிலையில் கடந்த சில தினங்களாக பகல் நேரங்களில் லேசான சாரல் மழை சிறிது நேரம் மட்டும் இருந்து வந்தது. ஆனால் அதிகளவு காற்று வீசத் தொடங்கியது. இதனால்

நீர்வரத்துப் பகுதிகளில் தண்ணீர் வரத்து வெகுவாக குறையத் தொடங்கியுள்ளது

÷இதனால், கொடைக்கானல் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் உருளைக் கிழங்கு, கேரட், பீட்ரூட் போன்ற காய்கறி பயிர்களை விதைக்க முடியாமல் உள்ளனர். மழையில்லாத காரணத்தால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

நாமக்கல்

**கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2500 வேண்டும்**

First Published : 27 Jun 2011 12:57:52 PM IST

குமாரபாளையம், ஜூன், 26: கரும்பு ஒரு டன்னுக்கு வயல்வெளி விலையாக ரூ.2500 வழங்க வேண்டும் என கரும்பு விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அனைத்து கரும்பு விவசாயிகள் சங்கத்தின் மாநில மாநாடு பள்ளிபாளையத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. பொன்னி சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். மாநாட்டைத் தொடக்கி வைத்து தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் கே. வெங்கடாசலம் பேசினார். சங்கத் துணைச் செயலர் கே. லோகநாதன் வரவேற்றார்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் மின்சார உற்பத்தி, எத்தனால் உற்பத்தி செய்வது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

மொலாசஸ் மற்றும் இணை மின்சாரத்தை வெளி மாநிலங்களில் விற்பனை செய்வதற்கான தடையை தமிழக அரசு விலக்கிக் கொள்ள வேண்டும்.

15 நாள்களுக்குள் விவசாயிகளுக்கு முழுப் பணத்தையும் வழங்க வேண்டும். கூட்டுறவு ஆலைகளில் வழங்குவதுபோல் தனியார் ஆலைகளும் டன்னுக்கு ஒரு கிலோ சர்க்கரை வழங்க வேண்டும்.

கரும்பு விவசாயிகளின் குடும்பங்களுக்கு இலவசக் காப்பீடு, விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும். 100 சத மானியத்தில் சொட்டுநீர்ப் பாசனம், 75 சத மானியத்தில் கரும்பு வெட்டும் இயந்திரத்தை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தினமலர்

**மரவள்ளி சாகுபடி விவசாயிகளுக்கு குளவி ஒட்டுண்ணி செயல்விளக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 27,2011,23:24 IST

விருத்தாசலம் : குறிஞ்சிப்பாடி வட்டத்தில் மரவள்ளி பயிரை விருத்தாசலம் வேளாண் விஞ்ஞானிகள் ஆய்வு செய்து, மாவு பூச்சிகளை கட்டுப்படுத்த குளவி ஒட்டுண்ணிகளை விடுவது குறித்து செயல் விளக்கம் அளித்தனர். குறிஞ்சிப்பாடி வட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மரவள்ளி செடியில் மாவு பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக உள்ளதால் செடிகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

மாவு பூச்சிகளை கட்டுப்படுத்த குளவி ஒட்டுண்ணி வழங்க வேண்டும் என விருத்தாசலம் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சுப்ரமணியனை சந்தித்து விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். இதனையடுத்து வேளாண் விஞ்ஞானி சுப்ரமணியன், தோட்டக்கலை உதவி பேராசிரியர் ஹரிப்பிரியா ஆகியோர் கொண்ட குழுவினர் குறிஞ்சிப்பாடி வட்டத்தில் கட்டியங்குப்பம், கிருஷ்ணன்குப்பம், திம்மராவுத்தன்குப்பம், பாளையம் உள்ளிட்ட கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மரவள்ளி செடியை பார்வையிட்டு, மாவு பூச்சிகளின் தாக்குதல் குறித்து ஆய்வு செய்தனர்.

பின்னர் விவசாயிகளுக்கு மாவு பூச்சி தாக்குதலை கண்டறிவது, அதனை கட்டுப்படுத்தும் குளவி ஒட்டுண்ணிகளை செடியில் விட்டு கடைபிடிக்க வேண்டிய செயல்முறைகள் குறித்து வேளாண் விஞ்ஞானிகள் விளக்கினர். பின்னர் குளவி ஒட்டுண்ணியை (அசிரோபேகஸ் பப்பாயியே) மாவு பூச்சி தாக்கப்பட்ட மரவள்ளி செடிகளில் விட்டு செயல்விளக்கமளித்தனர்.

**மக்காச்சோளம் விதை நேர்த்தி செய்து விதைக்க ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஜூன் 28,2011,01:42 IST

நாமக்கல்: "மக்காச் சோள பயிர் விதைப்பதற்கு முன், விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்' என, உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: ஒரு ஏக்கருக்கு தேவைப்படும் எட்டு கிலோ மக்காச்சோள விதைகளை விதைப்பதற்கு முன், ஆறிய அரிசி கஞ்சியுடன் இதர அசோஸ்பைரில்ல்ம் 200 கிராம் மற்றும் 200

கிராம் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்கள் கலந்து விதை நேர்த்தி செய்து, பின் நிழலில் உலர்த்தி, விதைகள் 90 சதம் முளைப்புத் திறன் இருக்குமெனில் குழிக்கு ஒரு விதை வீதம் அல்லது குழிக்கு இரண்டு வீதம் நான்கு செ.மீ., ஆழத்தில் விதைக்க வேண்டும். மானாவாரி பாசிப்பயறுக்கு அடியுரமாக தழைச்சத்து மற்றும் மணிச்சத்து இடப்படவில்லை எனில், இரண்டு சதம் டை அமோனியம் பாஸ்பேட் கரைசல் விதைத்த, 25 மற்றும் 40வது நாள் இலை மூலம் மழை ஈரம் இருக்கும் போது, மாலை நேரம் தெளிக்க வேண்டும். அதாவது, நான்கு கிலோ டை அமோனியம் பாஸ்பேட் உரத்தை, 200 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் மாலையில் வைத்திருந்து, அடுத்த நாள் மாலையில் வடித்தெடுத்து அக்கரைசலை, கைத்தெளிப்பான் கொண்டு மாலை நேரத்தில் இலையில் அடி மற்றும் மேல் பாகம் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். தெளிக்கும்போது வயலில் போதுமான ஈரம் இருக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 28,2011,00:26 IST

தர்மபுரி: தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. கலெக்டர் லில்லி தலைமை வகித்தார். பல்வேறு பகுதியில் இருந்து வந்த விவசாயிகள் பல்வேறு விவசாய தொடர்பான கோரிக்கை வலியுறுத்தி மனுக்களை கொடுத்தனர். மனுக்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை கலெக்டர் லில்லி கேட்டு கொண்டார். கூட்டத்தில் பேசிய பல விவசாயிகள், விவசாயிகள் பழமரக்கன்றுகள், உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் முதலியவை மானியத்தில் விநியோகம் செய்தல், நீர் பாசனம், பட்டா வழங்குதல், நெல் கொள்முதல் செய்தல், கிராம சாலைகள் அமைத்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வைத்தனர்.

விவசாயிகளுக்க மானியமாக அரசு அளிக்கும் நிதி காசோலையாக வழங்கப்படுகிறது என்றும் காசோலைகளை தேசிய வங்கிகளில் வழங்கினால், புதிதாக கணக்கு துவக்க வலியுறுத்துவதாகவும், நகை கடன்கள் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவித்தனர். தேசிய வங்கிகள் விவசாயிகளுக்க தாமதமின்றி கடன்கள் வழங்கிட வேண்டும் எனவும் புதிய கணக்கு துவங்க வைப்பு நிதிக்கு விவசாயிகளை வலியுறுத்த கூடாது என கலெக்டர் லில்லி கேட்டு கொண்டார். டி.ஆர்.ஓ., கணேஷ், வேளாண் இணை இயக்குனர் மனோகரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) கக்கன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ( நிலநீர் கோட்டம்) ராமமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மஞ்சள் விவசாயிகள் ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஜூன் 28,2011,01:38 IST

ஈரோடு: மஞ்சள் விலை நிர்ணயம் செய்வது குறித்து, தமிழக, கர்நாடகா விவசாயிகள் பங்கேற்கும் ஆலோசனை கூட்டம், இன்று ஈரோட்டில் நடக்கிறது. மஞ்சள் விவசாயிகள் கவுன்சில் ஒருங்கிணைப்பாளர் தெய்வசிகாமணி அறிக்கை: உற்பத்தி செலவை விட, குறைந்த விலைக்கு விளைபொருட்கள் விற்கப்படும் மோசமான நிலை அவ்வப்போது ஏற்படுகிறது. விளை பொருளுக்கு விவசாயிகளே விலை நிர்ணயம் செய்வதுதான் இப்பிரச்னைக்கு ஒரே தீர்வு. மஞ்சள் விலை வீழ்ச்சியை தடுத்து நிறுத்தவும், கட்டுப்படியாகும் விலை நிர்ணயம் செய்யவும் தமிழகள், ஆந்திரா, கர்நாடகா, மஹாராஷ்டிரா மாநில விவசாய சங்கத்தலைவர்களுடன் கலந்து பேசி, "மஞ்சள் விவசாயிகள் கவுன்சில்' என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. மஞ்சள் விலையை விவசாயிகளே நிர்ணயம் செய்வதற்காக, தமிழகம், கர்நாடகா மாநில விவசாய சங்கத் தலைவர்கள் கலந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டம், ஈரோடு சம்பத் நகர் கொங்கு கலையரங்கில் இன்று காலை 10 மணிக்கு நடக்கிறது. கர்நாடகாவை சேர்ந்த முன்னாள் அமைச்சர் புட்டனய்யா, கோடிஹள்ளி சந்திரசேகர், மகேஷ்பிரபு மற்றும் தமிழக விவசாய சங்கத் தலைவர்கள் 40க்கும் மேற்பட்டோர் கலந்து கொள்கின்றனர். இந்தியாவிலேயே முதன் முதலாக விளை பொருளுக்கு விவசாயிகளே விலை நிர்ணயம் செய்யும் இந்த முயற்சிக்கு விவசாயிகள் ஆதரவு தர வேண்டும்.

**"ரூ.121 கோடியில் வேளாண் விற்பனை முனையம்'**

பதிவு செய்த நாள் : ஜூன் 28,2011,00:44 IST

கோவை : ""கோவை மண்டலத்தில் பெருந்துறையில் 121 கோடி ரூபாய் மதிப்பில் வேளாண் விற்பனை முனையம்; பெதப்பம்பட்டியில் ஒரு கோடி ரூபாயில் தென்னை வணிக வளாகப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன,'' என, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை இணை இயக்குனர் சுப்ரமணியன் தெரிவித்தார். கோவை, வேளாண் பல்கலை சார்பில், 77வது "வேளாண் விஞ்ஞானிகள், விரிவாக்க அலுவலர்கள் மாநாடு' நேற்று துவங்கியது. இதில், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை இணை இயக்குனர் சுப்ரமணியன் பேசியதாவது: காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றைப் பதப்படுத்தி விற்பனை செய்தல், சேகரித்தல், சந்தைப்படுத்துதல் என அனைத்து வசதிகளுடன் கூடிய விற்பனை முனையங்கள் சென்னை, மதுரை, கோவை நகரங்களுக்கு அருகே தனியார், பொதுத்துறை பங்களிப்பில் ஏற்படுத்தப்பட உள்ளன. கோவை மண்டலத்தில் விற்னை முனையம் அமைக்க, பெருந்துறை சிப்காட் தொழிற்பேட்டையில் 40 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை 120.63

கோடி ரூபாய். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்னை, மதுரையில் விற்பனை முனையம் அமைக்க, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. நான்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 1.63 கோடி ரூபாய் செலவில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன. திருப்பூர் மாவட்டம் பெதப்பம்பட்டியில், ஒரு கோடி ரூபாய் மதிப்பில் தென்னை வணிக வளாகம் ஏற்படுத்தப்படுகிறது. இவ்வாறு, சுப்ரமணியன் பேசினார்.

**பயிர் இன்சூரன்ஸ் வழங்க இழுத்தடிக்கும் வங்கிகள்**

பதிவு செய்த நாள் : ஜுன் 27,2011,21:53 IST

ராமநாதபுரம் : பயிர் காப்பீடு தொகை வழங்காமல் இழுத்தடிக்கும் வங்கிகளால், விவசாயிகள் வேதனை அடைந்து வருகின்றனர்.
விவசாயிகளின் நலன் கருதி பயிர் காப்பீட்டு திட்டம் அமல் படுத்தப்பட்டது. 50 சதவீதத்துக்கு குறைவாக விளைச்சல் இருந்தாலோ, பயிர்கள் மழை, வெள்ளத்தால் அழிந்தாலோ காப்பீடு தொகை பெற்றுக் கொள்ளலாம்.
தற்போது தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் இதற்கான தொகை வழங்கப்பட்டு வருகிறது. கமுதி தாலுகாவுக்கு உட்பட்ட எம்.புதுக்குளம், வில்லானேந்தல், திருவறை, கீழ வில்லானேந்தல், நாரையூரணி, வேப்பங்குளம், குண்டு குளம், உ.கரிசல்குளம், ஒழுகு புளி, சொக்கலிங்கபுரம் பகுதி விவசாயிகளுக்கு இதுவரை காப்பீடு தொகை வழங்காமல், அதிகாரிகள் இழுத்தடிக்கின்றனர். இதையடுத்து இப்பகுதியை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட விவசாயிகள், விரைவில் காப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கலெக்டரிடம் மனு கொடுத்தனர்.

**சிறு,குறு விவசாயிகள் விபரம் சேகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜுன் 27,2011,22:20 IST

காரைக்குடி : சாக்கோட்டை, வேளாண் உதவி இயக்குனர் கண்ணன் கூறியதாவது: வேளாண் துறை சார்பில் சிறு, குறு விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்காக்கவும், உணவு உற்பத்தியை 50ல் இருந்து 100 சதவீதமாக உயர்த்தவும், பயிர்களின் உற்பத்தி திறனை கூடுதலாக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, விவசாயிகளின் புள்ளி விபரங்களை சேகரிக்கும் பணியில் வேளாண் துறை பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். சாக்கோட்டை வட்டார விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்கள் மூலமாக விபரங்களை தெரிவிக்கலாம், என்றார். விபரங்களுக்கு, உதவி வேளாண் அலுவலர்கள் சாக்கோட்டை (97908 90028), மித்ராவயல் (94420 47988), காரைக்குடி (94868 88230), பள்ளத்தூர் (95857 87608) தொர்பு கொள்ளலாம்.

**அமெரிக்காவிற்கு போட்டியாக களமிறங்கிய எகிப்து ஆரஞ்சு**

பதிவு செய்த நாள் : ஜூன் 27,2011,22:39 IST

அமெரிக்க ஆரஞ்சிற்கு போட்டியாக, எகிப்து நாட்டிலிருந்து ஆரஞ்சு பழங்கள் கோயம்பேடு மார்க்கெட்டிற்கு அதிக அளவில் வரத்துவங்கியுள்ளன. இந்தியாவில் தற்போது ஆரஞ்சு சீசன் இல்லாத நிலையில், அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் மற்றும் எகிப்து நாட்டிலும் ஆரஞ்சு பழ சீசன் களைகட்டியுள்ளது. இதன் எதிரொலியாக, அங்கிருந்து ஆரஞ்சு பழங்கள், அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. எகிப்தில் மக்கள் புரட்சி ஏற்பட்டு, ஆட்சி மாற்றம் வந்தபின், அங்கிருந்து ஆரஞ்ச் பழங்கள் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. அங்கிருந்து கப்பல்கள் மூலம், குளிர்பதன கன்டெய்னர்கள் மூலமாக, ஆரஞ்ச் பழங்கள் எடுத்து வருகின்றன. இந்தியாவில் மும்பை மற்றும் சென்னைக்கு மட்டும் எகிப்து பழங்கள் வருகின்றன. சென்னையில் இறக்குமதியாகும் எகிப்து ஆரஞ்ச் பழங்கள், இங்கிருந்து தென் மாநிலங்களுக்கு விற்பனைக்காக எடுத்து செல்லப்படுகிறது.

சென்னை கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் சிலர், வெளிநாட்டு ஏற்றுமதியாளர்களிடம் ஒப்பந்தம் செய்து, அதன் அடிப்படையில் ஆரஞ்சு பழங்களை இறக்குமதி செய்து, விற்பனை செய்கின்றனர். ஒரு பெட்டி கலிபோர்னியா ஆரஞ்ச், தற்போது மார்க்கெட்டில் 1,400 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சில்லரை விற்பனையில், ஒரு கிலோ 70 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. எகிப்து ஆரஞ்ச் பெட்டி ஒன்று 1,200 ரூபாய்க்கும், சில்லறை விலையில் கிலோ 65 முதல் 70 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இது குறித்து கோயம்பேடு மார்க்கெட், ஆரஞ்சு பழ மொத்த வியாபாரி மணிவண்ணன் கூறும்போது, "கலிபோர்னியா ஆரஞ்சு பழங்கள், மற்ற நாட்டு ஆரஞ்சு பழங்களை விட அளவில் மிகப்பெரியதாகவுள்ளன. வழக்கமாக ஆரஞ்சு பழம், சைஸ் பெரிதாக இருந்தால், அவற்றில் நீர்சத்து குறைவாக இருக்கும். ஆனால், கலிபோர்னியா ஆரஞ்சு பழங்கள் நீர்சத்து மற்றும் புளிப்பு தன்மை அதிகம் கொண்டவையாகவுள்ளது. எகிப்து ஆரஞ்சு பழங்கள் இனிப்பு தன்மை அதிகம் கொண்டவையாகவுள்ளது' என்றார்.
இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில்தான் ஆரஞ்சு பழங்கள் அதிகளவில் விளைகின்றன. இங்கு விளையும் ஆரஞ்சு பழங்கள்தான், நாடு முழுவதும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. பசியின்மை, ரத்தம் தொடர்பான பிரச்னைகள் கொண்டவர்கள், ஆரஞ்சு பழங்களை அதிகம் சாப்பிடுமாறு டாக்டர்கள் கூறுகின்றனர்.

பலர், உணவு சாப்பிட்ட பின் செரிமானத்திற்காகவும், ஆரஞ்சு பழரசத்தை விரும்பி சாப்பிடுகின்றனர். மகாராஷ்டிராவில் அக்டோபர் துவங்கி, ஜனவரி வரை ஆரஞ்சு சீசன் இருக்கும். அதன்பிறகு, நாட்டின் ஆரஞ்சு தேவையை பூர்த்தி செய்வதற்கு வெளிநாடுகளில் இருந்துதான் ஆரஞ்சு பழங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளில் சீசன் சராசரியாக இருந்தால், அவை ஏற்றுமதி செய்யப்படுவது இல்லை. உள்நாட்டின் தேவைக்காகவே ஒட்டுமொத்த ஆரஞ்சு பழங்களும் பயன்படுத்தப்படுகிறது. விளைச்சல் அபரிமிதமாக இருக்கும்போது, ஆரஞ்சு பழங்கள் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.-
எஸ்.அசோக்குமார் –

**துளசி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் : மகசூல் அதிகரிக்க விஞ்ஞானிகள் "டிப்ஸ்'**
பதிவு செய்த நாள் : ஜூன் 27,2011,22:51 IST

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள், நெல், கரும்பு, பயறு வகை மற்றும் காய்கறிகளுக்கு மாற்றாக துளசி செடிகளை ஆர்வமுடன் பயிரிட்டு வருகின்றனர். மருத்துவ குணம் மிகுந்த துளசி சாகுபடி மூலம் விவசாயிகள் நிறைவான லாபம் பெற, வேளாண் விஞ்ஞானிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர். திருவள்ளூர் மாவட்டத்தில், 47 சதவீதம் மனித உழைப்பு விவசாயத் தொழிலைச் சார்ந்துள்ளது. சென்னை கோயம்பேடு உள்ளிட்ட முக்கிய வணிகப் பகுதிகளுக்கு ரயில், பஸ் போக்குவரத்து போதிய அளவு உள்ளதால், உணவு தானியங்கள், காய்கறிகள், மலர்கள் போன்றவற்றை சந்தைப்படுத்துவது எளிதாகிறது. நெல், கரும்பு போன்றவற்றிற்கு நியாயமான விலை கிடைக்காத நிலையில், மாவட்ட விவசாயிகள் பழங்கள், பூக்கள், கீரை விளைச்சலில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இந்நிலையில், துளசி சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் குறைந்தச் செலவில், அதிக மகசூல் பெற்று நிறைவான லாபமடைய திரூவூரில் உள்ள வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர். வேளாண் அறிவியல் பல்கலையின், தோட்டக்கலைத் துறை உதவி பேராசிரியர் முத்துராமலிங்கம் மற்றும் மண்ணியல் துறை உதவிப் பேராசிரியர் குமரபெருமாள் ஆகியோர், இதுகுறித்து கூறியதாவது: துளசி இலைகள் மலரங்காடிகளில் விற்கப்படுவதற்கு மட்டுமல்ல. அவை பல்வேறு மருந்துப் பொருட்கள், நறுமணப் பொருட்கள் போன்றவற்றை தயாரிக்க பயன்படுகிறது. ஆண்டுதோறும் பிப்ரவரி முதல் செப்டம்பர் வரை இரண்டு அல்லது மூன்று முறை, நன்கு உழுத நிலத்தில் துளசியை நேரடி விதையாகவோ, நாற்றாகவோ பயிரிடலாம். நேரடி விதைப்பு முறையில் எக்டேருக்கு 200 முதல் 250 கிராம் வரை விதைகள் தேவைப்படும். 50 முதல் 60 செ.மீ., வரை இடைவெளி விட்டு, விதைகளை இரண்டு செ.மீ., ஆழத்தில் மண்ணில் ஊன்ற வேண்டும்.

பயிர் செய்த, 25 நாட்களில் துளசி செடி 15 செ.மீ., உயரம் வரை வளரும். நேரடி சாகுபடி என்றால் அறுவடைக்கு 100 நாட்கள் தேவைப்படும். நாற்று முறையெனில் 75 நாட்களிலேயே அறுவடை செய்யலாம். முதலாண்டு அறுவடையின்போது, செடியை நிலத்தில் இருந்து 20 செ.மீ., முதல் 25 செ.மீ., உயரம் வரை வெட்டிக் கொள்ளலாம். இரண்டாமாண்டில் 30 செ.மீ., வரையிலும், மூன்றாமாண்டில் 35 முதல் 45 செ.மீ., வரையிலும் வெட்டலாம். 20 செ.மீ.,க்கு குறைவாக செடியை வெட்டினால் பயிர் வீணாகும். அதேபோல், தரமான எண்ணெய் கிடைக்க அறுவடையை வெயில் நாளில் மேற்கொள்ள வேண்டும். முதலாண்டில் எக்டேருக்கு சராசரியாக 30 டன் வரை மகசூல் கிடைக்கும். அடுத்தடுத்த ஆண்டுகளில் மகசூல் கூடும் என வேளாண் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

லாபம் எப்படி? : ஒரு எக்டேர் நிலத்தில் 25 ஆயிரம் நாற்றுகளை நடவு செய்யலாம். நாற்றுக்கு மட்டும் 2,500 ரூபாய் செலவாகும். மற்றபடி, உழவுப் பணிக்கு 5,000 ரூபாய், உரம் 3,750, நடவு, அறுவடை கூலிக்கு 3,600 மற்றும் களையெடுப்பு, மண்ணை கிளறிவிடுதல் போன்ற பணிகளுக்கு 5,440 செலவாகும். ஆக மொத்தம் ஒரு எக்டேரில் துளசி சாகுபடி செய்ய 20 ஆயிரத்து 290 ரூபாய் செலவாகும். இதன் மூலம் எக்டேருக்கு 2,500 கிலோ துளசி இலை மகசூல் கிடைக்கும். ஒரு கிலோ துளசி 15 ரூபாய் என்ற அடிப்படையில் கணக்கிட்டால், துளசி பயிர் செய்யும் விவசாயிக்கு எக்டேருக்கு 17ஆயிரத்து 210 ரூபாய் லாபம் கிடைக்கும்.
- பெ.முத்துகிருஷ்ணன் –

# கொள்முதல் நிலையங்களில் முறைகேடுகளை தவிர்க்க விவசாயிகள் நிலத்தின் சிட்டா அடங்கல் நகல்களுடன் வர வேண்டும் கலெக்டர் வேண்டுகோள்

*காஞ்சீபுரம், ஜூன்.28–*
*கொள்முதல் நிலையங்களில் முறைகேடுகளை தவிர்க்க விவசாயிகள் நிலத்தின் சிட்டா அடங்கல் நகல்களுடன் வர வேண்டும் என்று காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் எஸ்.சிவசண்முகராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.*
*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–*
*தரமான நெல் கொள்முதல்*

காஞ்சீபுரம் மாவட்ட விவசாயிகளிடமிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சன்ன ரகநெல் குவிண்டால் ரூ.1100–க்கும், பொது ரகநெல் குவிண்டால் ரூ.1050–க்கும் என்ற விலையில் கொள்முதல் செய்கிறது. கோணி சேர்த்து 40.7 கிலோ என்ற அளவில் மேற்கண்ட விலைக்கு வாங்கப்படுகிறது. ஈரப்பதம் 17 சதவீதத்திற்கு மிகாமல் விவசாயிகள் சுத்தமான நெல்லை கொண்டுவர வேண்டும்.

இல்லையெனில் கொள்முதல் நிலையத்தில் இயந்திரத்தின் மூலம் நெல் தூற்றி சமச்சீர் செய்து எடையிட்டு வைக்க வேண்டும். இதற்கான கூடுதல் செலவினையும் நிர்வாகமே ஏற்றுக்கொள்ளும். விவசாயிகளுக்கு எந்தவித செலவும் இல்லை.

காஞ்சீபுரம் மாவட்டத்தில் தற்போது திருப்புலிவனம், திருமுக்கூடல், திருக்கழுக்குன்றம், தென்னேரி, சாலவாக்கம், அரும்புலியூர், தீட்டாளம், வேடபாளையும், சித்தாமூர்மாம்பாக்கம், மொரப்பாக்கம், முசிறிவாக்கம், பண்ருட்டி, மேடுமங்கலம், ஸ்ரீபெரும்புதூர், ஓனம்பாக்கம் ஆகிய 25க்கும் மேற்பட்ட இடங்களில் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையங்களில் காலை 9.30 மணி முதல் 1.30 மணி வரையும், மதியம் 2.30 மணி முதல் 6.30 மணி வரையும் விவசாயிகள் நெல்லை அளிக்கலாம்.

நிலத்தின் சிட்டா நகல்

விவசாயிகள் நெல்லை கொள்முதலுக்கு கொண்டு வந்தவுடன் முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து அடையாள அட்டை வழங்கப்படும். விவசாயிகள் மட்டுமே கொள்முதல் நிலையத்தில் நெல்லை விற்பனை செய்வதை உறுதி செய்வதற்காக, தங்கள் நிலத்தின் சிட்டா அடங்கல் நகல்களுடன் வரவேண்டும். வரத்திற்கேற்ப ஒவ்வொரு கொள்முதல் நிலையத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதால் நெல் சாகுபடி செய்துள்ள அனைத்து விவசாயிகளும் விற்பனை செய்யலாம்.

எனவே விவசாயிகள் அரசு நிர்ணயித்த விலையில் தங்கள் நெல்லை தரமானதாக்கி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலம் விற்று பயனடையவேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்றொரு அறிக்கை

கலெக்டர் வெளியிட்டுள்ள மற்றொரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்காக காஞ்சீபுரம் மாவட்டத்தில் 24 இடங்களில் தமிழ்நாடு அரசால் விடுதிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 4–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை படிக்கும் பள்ளி மாணவர்களும், கல்லூரியில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு,

*பாலிடெக்னிக் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கும் விடுதியில் சேரலாம்.*
*விடுதி மாணவ, மாணவிகளுக்கு உணவு, உறைவிடம் இலவசமாக வழங்கப்படும். 10-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 2 செட் பாலியெஸ்டர் காட்டன் இலவச சீருடைகள் வழங்கப்படும். 10, 12-ம் வகுப்பு படிப்பவர்களுக்கு சிறப்பு வழிகாட்டிகள் இலவசமாக வழங்கப்படும். தகுதியுள்ள மாணவர்கள் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர், காப்பாளினி அல்லது கலெக்டர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் இருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.*
*பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி விடுதிகளை பொறுத்த வரை வருகிற 30-ந் தேதிக்குள்ளும், கல்லூரி விடுதிகளை பொறுத்தவரை 31-ந் தேதிக்குள்ளும் சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.*

தினகரன்

**வரத்து அதிகரிப்பால் மல்லிகை கிலோ ரூ.50**

பதிவு செய்த நாள் 6/28/2011 12:32:43 AM



கோவில்பட்டி : கோவில்பட்டி பகுதியில் வரத்து அதிகரித்துள்ளதால் மல்லிகை பூ விலைவீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி பகுதிக்கு நாலாட்டின்புதூர், வில்லிசேரி, இளையரசனேந்தல், முடுக்குமீண்டான்பட்டி, சத்திரபட்டி, இடைசெவல், எட்டயபுரம், சங்கரன்கோயில், கழுகுமலை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்து விவசாயிகள் மல்லிகை பூக்களை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். தற்போது மல்லிகைப்பூ சீசன் என்பதால் வரத்து அதிகரித்துள்ளது.

தற்போது பண்டிகை மற்றும் கோயில் திருவிழாக்கள் நடைபெறும் காலமாக இல்லாததால் மல்லிகை விலை வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஒரு கிலோ மல்லிகைப்பூ ஆயிரம் ரூபாய் முதல் ரூ.1,800 வரை விற்கப்பட்டது. கடந்த 10 நாட்களாக வரத்து அதிகரிப்பால் மல்லிகை கிலோ ஒன்றுக்கு ரூ.50 வரை விற்கப்படுகிறது. விலை குறைந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆனால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். பூக்களை பயிரிட்டு, பாதுகாத்து, பறித்து விற்பனைக்கு அனுப்பும் வரை படாதபாடுபடும் விவசாயிகள் போதிய விலை கிடைக்காததால் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு கூலி கூட கொடுக்க முடியாத நிலையில் உள்ளனர்.

## தேயிலை மகசூல் அதிகரிப்பு டீத்தூள் ஆலைகள் திணறல்

பதிவு செய்த நாள் 6/28/2011 12:32:26 AM



உதகை : மகசூல் அதிகரித்துள்ள நிலையில் குந்தா பகுதியில் தினமும் 40 ஆயிரம் முதல் 60 ஆயிரம் கிலோ வரை பசுந்தேயிலை வரத்து உள்ளது. நீலகிரி மாவட்டம், குந்தா பகுதியில் நூற்றுக்கணக்கான ஹெக்டேரில் தேயிலை பயிரிடப்பட்டு வருகிறது. 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு, குறு விவசாயிகள் தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். பசுந்தேயிலை வரத்தை கருத்தில் கொண்டு குந்தா பகுதியில் 8 கூட்டுறவு, ஏராளமான தனியார் தேயிலைத்தூள் தொழிற்சாலைகளும் இயங்குகின்றன. காலநிலை மாற்றத்தால் கடந்த ஏப்ரல், மே மாதங்களில் பெய்த தொடர் கனமழையால் பசுந்தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது.

இதனால் தேயிலை தொழிற்சாலைகளுக்கு பசுந்தேயிலை வரத்து பன்மடங்கு அதிகரித்துள்ளது. பெரும்பாலான ஆலைகளிலும் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் கிலோ வரை மட்டுமே தேயிலை உற்பத்தி திறன் உள்ள நிலையில் தினமும் பசுந்தேயிலை வரத்து 40 ஆயிரம் முதல் 60 ஆயிரம் கிலோ வரை உள்ளது. எனவே தேயிலை தூளை அதிகளவில் உற்பத்தி செய்ய முடியாமல் ஆலைகள் திணறி வருகின்றன.

ஆலைகளில் பசுந்தேயிலையை கொட்டி உலர வைக்க குறைந்த அளவிலேயே டிரப்கள் (உலர் தொட்டி) உள்ளதால் அதிகப்படியாக வரும் பசுந்தேயிலையை கொட்ட இடமின்றி டிரப்களில் மேலும், மேலும் கொட்டப்படுவதால் பசுந்தேயிலை வெந்து பயனற்று போகும் நிலை காணப்படுகிறது. பசுந்தேயிலை வரத்தை முறைப்படுத்த ஆலை நிர்வாகம் கோட்டா முறையை நடைமுறைப்படுத்தி உள்ளது. குறிப்பிட்ட அளவிலான பசுந்தேயிலையை மட்டுமே ஆலைகள் கொள்முதல் செய்கின்றன.

இதற்காக கோட்டா அட்டை வழங்கப்பட்டுள்ளது. அட்டையுடன் வரும் விவசாய உறுப்பினர்களின் பசுந்தேயிலை மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. சில ஆலைகளில் கோட்டா நடைமுறையுடன் ஒரு நாள் விட்டு ஒரு நாள் மட்டுமே பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்படுகிறது. 1 மாதத்திற்கும் மேலாக நீடிக்கும் கோட்டா முறையால் குறிப்பிட்ட அளவிலான பசுந்தேயிலையை மட்டுமே பறிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதிகளவிலான பசுந்தேயிலையை செடிகளிலேயே விட்டு வைப்பதால் இலைகள் முற்றி எதற்கும் பயன்படாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. குந்தா பகுதியிலுள்ள கூட்டுறவு ஆலையில் விவசாயிகள் கோரிக்கையை ஏற்று கோட்டா முறையை ரத்து செய்ய சில தினங்களுக்கு முன் சுற்றுலா துறை அமைச்சர் புத்திசந்திரன் அறிவுறுத்தினார். இதையடுத்து கோட்டா முறை திரும்ப பெறப்பட்டு முழுமையாக பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்பட்டது. கோட்டா முறை ரத்து செய்யப்பட்ட முதல் நாளிலேயே வழக்கத்தை விட பசுந்தேயிலை வரத்து அதிகளவில் இருந்தது. பசுந்தேயிலை வரத்தை சமாளிக்க வழியின்றி ஆலை நிர்வாகம் மீண்டும் கோட்டா முறை யை அமல்படுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.